Appendix III.

(*Vide* answer to Starred Question No. 336 on 243 page)

காந்தி நூற்றாண்டு விழா மாநிலக் குழு பற்றிய விவர அறிக்கை.

காந்தியடிகளின் நூறாவது பிறந்த தினம் 2-10-1969 அன்று வருகிறது. அதை நூற்றாண்டு விழாவாக சிறந்த முறையில் கொண்டாடுவது பற்றித் திட்டமிடும் பொருட்டு, குடியரசுத் தலைவரைத் தலைவராகவும், பிரதமரைச் செயற்குழுத் தலைவராகவும் கொண்ட தேசியக் குழு ஒன்றை இந்திய அரசு அமைத்துள்ளது. அதில் பல துணைக் குழுக்கள் உள்ளன. விழா கொண்டாடுவது குறித்த வெவ்வேறு பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு அக்குழுக்களைச் சார்ந்தது.

தேசியக்குழு போன்று மாநில அளவில் விழா கொண்டாடுவது பற்றி திட்டமிட காந்தியடிகள் நூற்றாண்டு விழா மாநிலக் குழு தமிழக முதல் அமைச்சர் தலைமையில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் அமைக்கப்பட்டது. அக்குழுவுக்கு தமிழக ஆளுநர் அவர்கள் புரவலராக இருந்து வருகிறார்கள்.

மேற்படி மாநிலக் குழுவின் கீழ் பின்வரும் ஏழு உட்குழுக்கள் பணியாற்றி வருகின்றன :—

(1) நிர்மாணத் திட்ட உட்குழு.
(2) மக்கள் தொடர்பு உட்குழு.
(3) கிராம நல உட்குழு.
(4) பொதுத் திட்ட உட்குழு.
(5) மாதர் நல உட்குழு.
(6) வழிவகை உட்குழு.
(7) காந்தி பொருட்காட்சி உட்குழு.

மாநிலக் குழுவும் உட்குழுக்களும் பல முறை கூட்டப்பட்டு விழா கொண்டாடுவதற்கான பல வழி வகைகள் ஆராயப்பட்டு தீர்மானிக்கப்பட்ட திட்டங்கள் முறையாக செயல்படுத்தப்படுகின்றன.

காந்தி நூற்றாண்டு விழாத் தொடர்பாக நிறைவு பெறவேண்டிய முக்கிய ஆக்கத் திட்டங்கள் பின்வருமாறு :—

1. தென் ஆப்பிரிக்காவில் காந்தியடிகள் தலைமை தாங்கிய சத்தியாக்கிரகப் போரில் ஈடுபட்டு உயிர் தியாகம் செய்த வீர மங்கையான வள்ளியம்மையின் நினைவாக அவருடைய பிறந்த ஊரான தில்லையாடி கிராமத்தை மாதிரி கிராமமாக அமைத்தல். உட்குழுவின் மூலம் சுமார் 5 லட்சம் ரூபாய் நன்கொடையாக வசூலித்து இத்திட்டத்தை நிறைவேற்ற ஏற்பாடாகியுள்ளது.

2. சென்னை இராஜாஜி மண்டபத்தையடுத்து உள்ள லாட்ஜ் என்னும் கட்டிடத்தில் காந்தியடிகள் பற்றிய நிரந்தர பொருட்காட்சி நிலையம் ஒன்று நிறுவுவது. இதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடந்துவருகின்றன.

3. 'தமிழ்நாட்டில் காந்தி' என்ற பெயரால் ஒரு விரிவான நூல் எழுதி வெளியிட ஏற்பாடாகியுள்ளது. இதற்கென இதுவரை ரூ. 10,000 செலவிடப்பட்டுள்ளது. இந்நூல் 1969 அக்டோபர் மாதத்திற்குள் வெளியிடப்படும்.

4. சென்னையில் காந்தியடிகளைப் பற்றிய கருத்தரங்கு நடத்துதல்.

5. பள்ளி மாணவர்களுக்கு காந்தியடிகளைப் பற்றிய புத்தகங்களை மூன்று வயதுப் பிரிவுகளில் பிரசுரித்தல்.

[31 st March 1969

6. காந்தியடிகளைப் பற்றி அவரது வாழ்க்கையில் நடந்த முக்கிய மான நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் நடமாடும் கண்காட்சி அமைத்தல்.

7. காந்தியடிகள் பிறந்த நாளன்று அமைச்சர்கள் மற்றும் தலைவர்கள் பேசின உரைகளை சிறு புத்தமாக அச்சிட்டு வெளியிடல்.

8. காந்தி உருவம் பொறித்த உலோக இலச்சினைகள் தயாரித்து பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் விநியோகித்தல்.

9. ஆசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் காந்தியடிகள் கொள்கை களை மாணரவர்களுக்கிடையே பரப்புவதற்கான குறுகிய கால பயிற்சி முகாம்களை நடத்துவது.

10. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் போன்று காந்தி பொருட் காட்சிகள் அமைத்து அதில் மாணவர்கள் வரைந்த படங்களை வைத்து பிராந்திய மக்களை அதில் கலந்துகொள்ளச் செய்தல்.

இதுவரை செயல்படுத்திய திட்டங்கள் பின்வருமாறு :—

1. 1966-ம் ஆண்டு இறுதியில் மதுரையில் காந்தியடிகள் பற்றிய மாநிலக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

2. காந்தியடிகள் பிறந்த நாளன்று பள்ளிச் சிறுவர்களுக்கு வழங்கப் படுவதற்காக அஞ்சல் அட்டை அளவில் காந்தியடிகளின் உருவப் படத்தை அச்சிட்டு மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன.

3. காந்தியடிகளைப் பற்றிய நூல்களையும், காந்தியடிகள் எழுதிய நூல் களையும் அரசாங்க தகவல் நிலையங்களில் வைக்கப்பட வாங்கப்பட்டன.

4. குஜராத் அரசிடமிருந்து "நூறு நிமிடங்கள்" என்ற காந்தி பற்றிய திரைப் படச் சுருள் 15 பிரதிகளும், பம்பாய் காந்தியடிகள் திரைப் படக் குழுவிலிருந்து "இருபதாம் நூற்றாண்டின் தீர்க்கதரிசி" என்ற படச் சுருளில் 6 பிரதிகளும் வாங்கி கிராமங்களில் திரையிட மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

5. 1967-ல் காந்தி பிறந்த நாளை காந்தி நூற்றாண்டு விழா ஆயத்த வாரமாகக் கொண்டாடப்பட்டது. மாநில ஆளுநர், முதலமைச்சர், கல்வி தொழில் அமைச்சர் முதலியோர் வானொலியில் உரையாற்றினார்கள் 1968-ல் காந்தி பிறந்த நாளை உற்பத்தித் தினமாக கொண்டாடப்பட்டது. அதைத் தொடர்ந்து கலைஞர்கள் தினம், தொழிலாளர் தினம், மகளிர் தினம் மாணவர் தினம் என்ற பிரிவுகளில் எல்லோரையும் ஈர்க்கும் வகை யில் காந்திய கொள்கைகளை விளக்கும் நாடகங்கள், வில்லுப்பாட்டு, இவை களோடு சர்வகட்சித் தலைவர்களின் பொதுக்கூட்டம் முதலியவை நடத்தப்பட் டன. "மகாத்மா" என்ற திரைப்படம் பாலர் அரங்கில் திரையிடப்பட்டது. அஞ்சலி, பிரார்த்தனை கூட்டங்கள் சென்னையிலும் ஊராட்சி ஒன்றியங் களிலும் எல்லா மதத் தலைவர்களையும் கலந்துகொள்ளச் செய்து நடை பெற்றன.

6. 1968, 1969 ஆண்டு ஜனவரி 30-ந் தேதி தியாகிகள் தினமாக மாநிலம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டது.

7. கஸ்தூர்பா கிராமில் மாதர் நல உட்குழு ஜனவரி 1968-ல் பிராந்திய முகாம் நடத்தியது. பின்னர் ஏப்ரல் 1968-லும் ஸ்ரீரங்கத்தில் பயிற்சி முகாம் நடத்தியது. ஜூலை 1968-ல் கும்மிடிப் பூண்டியிலும், ஆகஸ்ட் 1968-ல் திருவான்மியூரிலும் கல்லூரி மாணவிகளுக்கான பயிற்சி முகாம் நடத்த மானியம் வழங்கப்பட்டது.

31st March 1969]

8. எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒவ்வொரு விழாக் குழு அமைக்கப்பட்டுள்ளன. அக் குழுக்கள் கிராமங்களில் பள்ளிக்கூடம் கட்டுதல், கிணறு வெட்டுதல் போன்ற ஆக்க வேலைகளில் ஈடுபட்டு கிராம நல உட்குழு தயாரிக்கும் திட்டங்களில் பங்கு பெறுகின்றன.

9. பள்ளி மாணவ மாணவியரிடையே காந்தியடிகள் பற்றி நாடகப் போட்டி நடத்தி சிறந்த நாடகங்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

10. கல்வித்துறை, பாடப் புத்தககங்களில் காந்தியடிகளைப் பற்றி பாடங்களைச் சேர்த்துள்ளது. மற்றும் காந்தியடிகளைப் பற்றிய புத்தகங்களைத் துணைப்பாடப் புத்தகங்களாக அனுமதிக்க அத்துறை ஒத்துக்கொண்டுள்ளது.

11. "காந்தியடிகளின் நவகாளி யாத்திரை" என்ற வண்ணப்படங்கள் 50,000 பிரதிகள் எல்லா மாவட்டங்களிலும் விற்கப்பட்டன.

12. 1969-ம் ஆண்டு நாட்காட்டிகளிலும், நாட்குறிப்புகளிலும் காந்தியடிகளின் படத்தையும், பொன் மொழிகளையும் அச்சிடும்படி எல்லா தொழில் அதிபர்களும் வியாபாரிகளும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அரசாங்க நாட்காட்டி களிலும் காந்தியடிகளுடைய பொன்மொழிகள் அச்சிடப்பட்டன.

13. மக்கள் தொடர்பு உட்குழு கல்லூரி மாணவர்களிடையே காந்தியடிகள் பற்றிய கட்டுரைப் போட்டி ஒன்று நடத்தி, வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களை டில்லி ராஜ்கட்டம், வார்தா முதலிய இடங்களுக்கு அழைத்துச் சென்று வந்தது. அதற்கு செலவான தொகையில் ஒரு பகுதியை மாநிலக் குழு மானியமாக வழங்கியது.

14. மக்கள் தொடர்பு உட்குழு காந்தியடிகளின் ஓவியப் போட்டி ஒன்றை நடத்தி, வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கியது. போட்டிக்கு வந்த சித்திரங்கள் கண்காட்சியாக வைக்கப்பட்டன. இந்த வகையில் ஏற்பட்ட செலவினங்கள் முழுவதையும் மாநிலக் குழு மானியமாக வழங்கியது.

15. நடப்பு ஆண்டில் தயாரிக்கப்படும் கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், திரைப்படங்கள் எல்லாம் காந்தியத்தை சித்தரிக்கும் விதத்தில் அமைக்கப்பட்ட வேண்டும் என்று அது சம்பந்தப்பட்ட பிரமுகர்களை எல்லாம் கூட்டி வேண்டுகோள் விடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கேற்றாற்போல் மாநில நாடக சங்கம் இவ்வாண்டு தொழில் முறை மற்றும் பொழுதுபோக்கு நாடக மன்றங்களுக்கான பரிசுகள் காந்திய தத்துவங்களைக் கொண்ட நாடகங்களுக்கு மட்டுமே அளிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.

மேற்கண்ட திட்டங்களைத் தவிர சேவாக் கிரகத்தில் 1968 ஜூலை மாதம் நடந்த தேசீயக் குழு, மாநிலக் குழுக்களின் சுட்டு மாநாட்டில் முடிவெடுக்கப்பட்ட 9 அம்ச குறைந்த பட்ச திட்டமும் கீழ்க்கண்ட முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திட்ட எண் 1-ம், 2-ம்.

பஞ்சாயத்து ராஜ்யம் மற்றும் கிராமங்களின் தன்னிறைவு.

மாநிலக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க ஊராட்சி ஒன்றியங்களில் அமைக்கப்பட்ட விழாக் குழுக்கள் 2—10—1969-க்குள் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

(அ) ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த எல்லா கிராமங்களிலும் குடி தண்ணீர் வசதி செய்தல்.

(ஆ) பூதானமாக நிலம் பெற்று, பள்ளிகளில் மத்திய உணவுத் திட்டத்தையும் ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத் திட்டத்தை நடத்துவது.

(இ) உணவு உற்பத்தியைப் பெருக்குவதோடு ஒவ்வொரு கிராமமும் தன்னிறைவு கொள்ளும் விதத்தில் கதர் முதலிய கிராமப் பொருட்களை பெருக்கி, உள்ளூர் தொழில் விற்பன்னர்களை ஊக்குவிப்பது.

[31st March 1969

(ஈ) " காந்தித் திடல் " என்ற பெயரால் மக்களின் சமூக விழாக்களுக்கு ஏற்ற பொது மேடை எல்லா கிராமங்களிலும் அமைப்பது.

திட்ட எண் 3.

சமூக ஒற்றுமையும், தேசிய ஒருமைப்பாடும்

சமுதாய மேம்பாட்டிற்கான பணிகளை மேற்கொள்ள எல்லா மாவட்டங்களிலும் சீரணித் திட்டம் அமைக்கப்பட்டு, பொதுநலத்தில் ஆர்வமுள்ள ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு இதன் வாயிலாக ஆக்கத் திட்டங்களை உருவாக்க வசதியும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றிய காந்தியடி ள் நூற்றாண்டு விழாக் குழுக்கள் சாதி, சமய, கட்சி வேறுபாடில்லாமல் சகல பிரிவினரையும் உறுப்பினர்களாகக் கொண்டு அமைய வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மாநிலக் குழு அளவில் காந்தி பிறந்த நாள் கொண்டாட்ட திட்டங்கள் சகல கட்சித் தலைவர்களின் ஆலோசனைகளுடன் வகுக்கப்பட்டன.

திட்ட எண் 4.

ஒவ்வொரு கிராமத்திலும் இல்லங்கள்தோறும் காந்திய நெறிகளைப் பரவச் செய்தல்

மாதத்திற்கு ஒருமுறையாவது காந்தியடிகளின் கொள்கைகளை விளக்கும் பாடல்கள், கட்டுரைகள், நிகழ்ச்சிகள் முதலியவற்றை குழந்தைகளுக்கு கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் எல்லா நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த நூல்நிலையங்களிலும் காந்தியடிகளைப் பற்றிய நூல்களும், காந்தியடிகள் எழுதிய நூல்களும் வாங்கி வைக்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

மாதர் நல உட்குழு பாதயாத்திரை ஒன்று 24—9—1968-ல் எட்டையபுரத்தில் தொடங்கி, காந்தி கலைக்கூடம் அமைந்த மதுரையில் 1–10 1968ல் முடிவடைந்தது. வழியெல்லாம் கிராமங்களில் மாதர், குழந்தைகள் நலனுக்கான திட்டங்களை நிறைவேற்ற ஏற்பாடுகள் தொடங்கப்பட்டன.

காந்தியடிகள் பற்றிய திரைப்படத் தொகுப்புகள் தமிழக கிராமங்களில் இலவசமாகத் திரையிட வகை செய்யப்பட்டது. மேலும் எல்லா மாத, வார, தினசரிகளும் காந்தியடிகளை நினைவுகொள்ளும் செய்திகளையும், அவருடைய மணிமொழிகளையும் தொடர்ந்து வெளியிட வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தமிழக அரசு வெளியிடும் " கிராம நலம் ", " மேழிச் செல்வம் ", பாக்கியலக்ஷ்மி " போன்ற பத்திரிகைகளில் காந்திய கருத்துக்கள் சிறப்பாக வெளியிடப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள வானொலி நிலையங்கள் காந்தியடிகள் பற்றிய சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலி பரப்புமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டன.

திட்ட எண் 5.

இளைஞர்களுக்கு காந்திய அடிப்படைக் கொள்கைகளை விளக்குதல்

எல்லாக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் காந்திய தத்துவம் பற்றிய கருத்தரங்கு நடைபெற ஏற்பாடாகியுள்ளது. 1968 நவம்பர் மாத இறுதியில் சென்னை பல்கலைக் கழகம் சிறப்புக் கருத்தரங்கு ஒன்றை மூன்று நாட்கள் நடத்தியது.

திட்ட எண் 6.

மது விலக்கு

தமிழ்நாடெங்கும் ஏற்கெனவே மதுவிலக்கு அமுலில் இருந்து வருகிறது. 1968 ஏப்ரல் மாதம் நடந்த அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு தமிழக அரசு மதுவிலக்கில் கொண்டுள்ள உறுதியைப் பாராட்டியுள்ளது.

திட்ட எண் 7.

கிராமங்களில் குடிநீர் வசதி

ஊராட்சி ஒன்றியங்கள் தோறும் அமைந்துள்ள காந்தி நூற்றாண்டு விழாக் குழுக்கள் கிராமங்களில் குடிநீர் வசதிக்கான திட்டங்களை நிறைவேற்றி வருகின்றன.

திட்ட எண் 8.

அரிசன முன்னேற்றம்

சென்ற ஆண்டு காந்தி பிறந்த நாள் முதல் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஒருவரை மணந்துகொள்ளும் வேறு சாதி மணத் தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கம் அளிக்கும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

மனிதர்கள்மூலம் மலம் அகற்றும் பழைய முறையைத் தவிர்த்து, கழிவிடங்களை நவீன முறையில் அமைக்கும் திட்டத்தை ஆராய்ந்து உருவாக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு உள்ளது. கேரளம், பீகார், குஜராத் போன்ற மாநிலங்களில் நடைபெறும் இத்தகைய திட்டங்கள் ஆராயப்பட்டு மேற்கொள்ளப்பட இருக்கின்றன. தியாகிகள் நினைவு நாளை அரிசனக் குடி இருப்பில் நடத்தவேண்டுமென 1968-ல் அரசு ஆணையிட்டது. அதற்கென காந்தியடிகளின் மணிமொழிகள் பொறித்த அட்டைகள் தயாரிக்கப்பட்டன.

திட்ட எண் 9.

வரதட்சிணை, ஆபாச சுவரொட்டிகள் ஆகியவற்றை நீக்குதல்

மாதர் நல உட்குழுவினர், வரதட்சிணையை எதிர்த்து தொடர்ந்து பிரசாரம் செய்து வருகின்றனர். கஸ்தூரிபா கிராமம், திருவரங்கம், கும்மிடிப்பூண்டி, திருவான்மியூர் முதலிய இடங்களில் நடந்த மாணவிகள், ஊழியர்கள் ஆகியோரின் பயிற்சி முகாமில் வரதட்சிணை, ஆபாசச் சுவரொட்டி முதலியவைகளை ஒழிப்பதற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டன. ஆபாசமான சுவரொட்டிகளைத் தடுக்க 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அதிகாரிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை தமிழக அரசு அமைத்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மேற்சொல்லப்பட்ட திட்டங்கள் தவிர உட்குழுக்கள் அவ்வப்போது அனுப்பும் பயனுள்ள திட்டங்களும் பரிசீலிக்கப்பட்டு அமுல் நடத்தப் படுகின்றன.

APPENDIX IV.

[*Vide* Item VI on page 262]

L.A. Bill No. 8 of 1969.

[As passed by the Assembly]

A Bill further to amend the Madras Cultivating Tenants Protection Act, 1955 *and the Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act,* 1956.

BE it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twentieth Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Madras Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Act, 1969.

(2) It shall come into force on such date as the State Government may by notification appoint.